# நல்ல தலைவர்கள் [முன்னோடிகள்] தேவைப்படுவதன் முக்கியத்துவம் [6:3-7]

*எருசலேமின் சபையிலிருந்து விரிசல்கள் மூலம் கிரேக்க ரானவர்(யூதர்)களின் விதவைகள் விழுந்து போயிருந்தனர். அப்போஸ்தலர்கள் அச்சூழ்நிலையைச் சரியானமுறையில் கையாண்டிராதிருந்தால், அதன் கடுமையான விளைவுகள் அழிவுக்குரியதாய் ஆகியிருந்திருக்கும். நமது கடந்த பாடத்தில், நல்ல முன்னோடிகள் சிக்கலான சூழ்நிலையில் செயல்படும் விதம்பற்றி நாம் கவனித்தோம். பின்வரும் ஆலோசனைகளை நாம் முன்வைத்தோம்: (1) நல்ல முன்னோடிகள் பிரச்சனையை உடனடியாக - உணர்வுப் பூர்வமாக - கையாளுகின்றனர், (2) நல்ல முன்னோடிகள் இதில் சபையாரை ஈடுபடுத்துகின்றனர், மற்றும் (3) நல்ல முன்னோடிகள் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கின்றனர். நல்ல தலைமைத்துவம் என்பது சபையின் மாபெரும் தேவைகளில் ஒன்றாக இருப்பதால், நாம் நடபடிகள் 6க்கு மறுபடியும் திரும்பி, வசனங்கள் 3 முதல் 7 வரை உள்ள பகுதிகளில் நல்ல தலைமைத்துவத்தின் கொள்கையாக நாம் இன்னும் வேறு எவற்றைக் காண முடியும் என்று பார்ப்போம்.*

## நல்ல முன்னோடிகள் சரியான நபர்களை அவர்களுக்குத் தகுந்த பணிகளில் அமர்த்துகின்றனர் (6:3)

*நல்ல முன்னோடிகள் எல்லாப் பணிகளையும் தாங்களே செய்யாவிட்டாலும் - குறிப்பிட்ட தனிநபர்களைக் கொண்டு,*

அந்நபர்களைப் பொறுப்பேற்கச் செய்வதன் மூலம் - பணிகள் செய்யப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்கின்றனர். ‘‘ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய வேலை என்பது ஒருவருமே செய்யாத வேலையாகிவிடும்.” குறிப்பிட்ட மக்கள், குறிப்பிட்ட வேலைக்குப் பொறுப்பாளர்களாக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர்கள் சபையாரிடத்தில் குறிப்பிட்ட சில மனிதர்கள் (எண்ணிக்கையில் ஏழு பேர்), குறிப்பிட்ட பணியை (பந்தி விசாரணை) மேற்கொள்வதற்காகத் தேர்ந் தெடுக்கும்படி கூறினர்.

யாரேனும் ஒருவரிடம் இப்பணியை ஒப்படைக்கலாம் என்று இது பொருள்படாது, தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தகுதியுள்ள வர்களாய் இருக்க வேண்டும். “பந்தி விசாரணை’’ செய்யக் கூடியவர்களுக்கு என்ன தகுதிகள் தேவைப்பட்டது? அவர்கள் நல்ல சமையல்காரர்களாக இருக்க வேண்டுமா? கனமான பலசரக்கு மூட்டைகளைத் தூக்கக்கூடிய அளவுக்கு அவர்கள் பலவான்களாயிருக்க வேண்டுமா? திறமையான உணவக உதவியாளர்போல அவர்கள் ஒவ்வொரு கையிலும் நான்கு தட்டுக்களைத் தடுமாறாமல் தூக்கிச் செல்லக்கூடிய நல்ல சமவுணர்வுள்ளவர்களாயிருக்க வேண்டுமா? “பந்தி விசாரணை” என்பது இது அல்ல என்று நாம் நன்கு அறிவோம். (பந்தி விசாரணை என்பது ஒரு உருவக மொழி நடையாகும். “அவள் நல்ல முறையில் சாப்பாட்டு மேஜையை அமைத்திருக்கிறாள்” என்பது ஒரு பெண்மணி உணவு வகைகளை நல்ல முறையில் கொண்டு வந்து வைத்திருப்பதைக் குறிப்பது போலவே, “பந்தி விசாரணை’’ என்று கூறப்படுவதும், ‘‘அன்றாடம் உணவு வழங்குதலை” க் குறிப்பிடுவதாகும் [வ. 1].) இப்பணியில் உடல் உழைப்பு ஈடுபடுத்தப்பட்டாலும், வெளிப்புறமான தகுதிகளல்ல ஆனால் உள்ளான தகுதிகளே - சரீரப்பிரகாரமானதல்ல, ஆனால் ஆவிக்குரியவைகளே - இங்கு முக்கியப்படுத்தப்பட்டன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

முதலாவது தகுதியானது, இதற்குப் பெண்களல்ல, ஆண்களே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சபையில் தலைமைத்துவப் பொறுப்புகளில் ஆண்களே இருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாகும்.

இரண்டாவது தகுதியானது, இந்த மனிதர்கள் சேவை செய்யும் இருதயங்கள் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

அவர்கள் ‘‘உணவு பரிமாறும்’’ பொறுப்பேற்பவர்கள் ஆவார்கள்; அவர்கள் “பந்தி விசாரணை” செய்ய வேண்டும். ‘‘வேலை செய்தல்’’ மற்றும் ‘‘வேலை’’ என்ற வார்த்தைகள் *diakonos* என்ற வார்த்தையின் வினை வடிவத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இது “ஊழியன்” என்ற வார்த்தைக் குரியதாகும். இதிலிருந்தே நாம் “உதவிக்காரர்” (deacon) என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.

இவர்கள் “முதல் உதவிக்காரர்களா?” அல்லவா என்பது பற்றி பல ஆண்டுகளாக அதிகமான விவாதம் எழுந்துள்ளது. இருபுறமும் நல்ல கவனக்குறிப்புகள் ஆராயப்பட்டுள்ளன. இவைகளில் ஒரு புறத்தில் “deacon” என்பதற்குரிய வினை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதால், இவர்கள் உதவிக்காரர்களாயிரா விட்டால், உதவிக்காரர்கள் செய்யக்கூடிய குறிப்பிட்ட பணி களைக் கூறும் வேறு வசனப்பகுதிகள் எதுவும் இல்லையே என்று குறிப்பிடுகின்றனர். மறுபுறத்தில், இவர்கள் “உதவிக்காரர்கள்” என்று குறிப்பிடப்படவில்லை,[1] மற்றும் இவர்களின் தகுதிகள் உதவிக்காரர்களுடைய தகுதிகளைப் போன்றதாகவே (1 தீமோ. 3:8-13)[2] இருந்திருக்கவில்லையே என்று குறிப்பிடுகின்றனர். மேலும், மூப்பர்கள் இல்லாமல் உதவிக்காரர்களின் “அலுவலை” நாம் கொண்டிருக்க முடியுமா என்ற வினாவும் எழும்புகின்றது (பிலி. 1:1; 1 தீமோ. 3:1, 8).[3] நடபடிகள் 6ல் உள்ள இந்த ஏற்பா டானது ஒரு விசேஷித்த ஏற்பாடாகும் என்று எண்ணுவதே மிகச் சிறந்ததாகும் - ‘‘பன்னிருவருக்கு’’ (6:2), ‘‘ஏழு பேர்’’ (21:8) உதவியாயிருந்தனர் - பின்னாளில் மூப்பர்கள், உதவிக்காரர்கள் கொண்ட நிலையான ஒரு ஏற்பாட்டைக் கொண்டு பதில் மாற்றம் செய்யப்படக் கூடிய (அப். 11:30; 14:23; பிலி. 1:1) ஒரு தற்காலிகமான ஏற்பாடாகவே இது இருந்தது. இந்த ஏழு பேர் உதவிக்காரர்களுக்கு முன்னோடிகள் என்று எண்ணப்படலாம். இவ்வசனப் பகுதியிலிருந்து[4] உதவிக்காரர்களின் பணியைப் பற்றி நாம் அதிகமாய்க் கற்றுக் கொள்ள முடியும்.

மூன்றாவதாக, இந்த ஆண் உதவியாளர்களுக்கு ஆவிக்குரிய தகுதிகள் சில தேவைப்பட்டிருந்தது என்பதைக் கவனியுங்கள். அவர்கள் “பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றவர்களாய்” இருக்க வேண்டும். “நற்சாட்சி பெற்றவர்கள்” என்றால் சமுதாயத்தின் (சிறப்பாகக் கிறிஸ்தவ சமுதாயத்தின்) அனைத்துப் பகுதியினராலும் கனம் பெற்றவர்களாயிருக்க

வேண்டும் என்று பொருள்படும். அவர்கள் தங்கள் பணியைச் செய்கின்றபோது இயேசுவையும், அவரது சபையையும் பிரதிநிதித்துவப்படுத்தப் போகிறபடியால், அவர்கள் நற்சாட்சி யுடையவர்களாய் இருக்க வேண்டியது அவசியமாகும். ஒருவருடைய வாழ்க்கை முறையானது இருக்க வேண்டிய விதத்தில் இல்லாவிட்டால்[5] மற்றவர்களால் "பார்க்கப்படக் கூடிய பொறுப்புள்ள பணிகள்"[6] எதுவும் அவருக்கு தரப்படக் கூடாது.

"பரிசுத்த ஆவியினால் நிறைந்து" என்றால் "ஆவியானவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல்'' என்று பொருள்படும். இவ்விடப் பொருளில், இது அற்புதங்கள் செய்யும் வல்லமை யைக்[7] குறிப்பதில்லை. அந்தத் தனிநபர் ஆவிக்குரிய முதிர்ச்சி நிலையைப் பெற்றிருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட யாவரும் ஞானஸ்நானத்தின்பொழுது பரிசுத்த ஆவியானவரை ஒரு வரமாகப் பெற்றிருந்தனர் (2:38). ஆவியானவரால் ஏவப்பட்ட வார்த்தையை (அப்போஸ்தலரால் போதிக்கப்பட்டதை) தொடர்ந்து அவர்கள் கவனித்துக் கீழ்ப்படிகையில் ஆவியானவர் தங்கள் வாழ்வைக் கட்டுப் படுத்த அவர்கள் அனுமதித்தனர். இதன் விளைவாக "ஆவியின் கனிகள்" உண்டாயின: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம் (கலா. 5:22, 23).[8]

''ஞானம்'' என்பது கொடுக்கப்படவிருக்கும் பணிக்கான நடைமுறைத் தகுதியாக இருக்கிறது. நூற்றுக்கணக்கான அல்லது ஒருவேளை ஆயிரக்கணக்கானவர்களின் தேவைகளைக் கவனிக்க, நல்ல முறையில் முடிவெடுக்கக் கூடிய, மற்றும் பொது அறிவு உள்ள மனிதர்கள் தேவை. வேலையைச் செய்து முடிப் பார்கள் என்று நம்பப்படுகின்ற மனிதர்களே தேர்ந்தெடுக்கப் பட வேண்டியிருந்தது.

இந்தத் தகுதிகளை மறுபடியும் ஒருமுறை பார்வை யிடுங்கள்: "... பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ...'' இந்தத் தகுதிகள் உதவிக்காரரின் விசேஷ ''அலுவலுக்கானது'' என்று எண்ணுவதைப் பார்க்கிலும், சபையில் உள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் - பிரசங்கியார், மூப்பர், உதவிக்காரர், வேதாகம வகுப்பு ஆசிரியர், சபைப் பொருளாளர் அல்லது கட்டிடத்தைச் சுத்தம் செய்பவர் யாராக

*இருந்தாலும் அவர்கள் யாவருக்கும்-இது தேவை என்று நாம் உணர வேண்டும்! உங்களுக்கு தரப்பட்ட பொறுப்பு எதுவாக இருந்தாலும், நீங்கள் நற்சாட்சி பெற்றிருக்க வேண்டியது தேவை; நீங்கள் ஒரு கிறிஸ்தவராக வளர்ந்து, உங்கள் வாழ்க்கையில் தேவன் கிரியை செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டியது தேவை; நீங்கள் உங்கள் பொறுப்பை நன்முறையில் நிறைவேற்றக்கூடிய நல்லுணர்வுள்ளவராய் இருப்பது அவசியமாகும்.*

## நல்ல முன்னோடிகள் கொடுக்கப்படும் பணிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர் (6:4)

*சரியான பணிக்கு, சரியான மக்களுக்காகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, செய்ய வேண்டிய பணி முக்கியமானது என்பதை முன்னோடிகள் தெளிவாக்கினர். சில சமயங்களில் அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் - "நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாது தரித்திருப்போம்" என்பவைகள் - பந்தி விசாரணை என்பது ஒரு தாழ்ந்த பணி என்று மறைமுகமாகக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டவைகள் போலத் தோன்றலாம். ஆனால் பன்னிருவரின் நோக்கம் இதுவல்ல. சபையாரின் விசேஷித்த கூட்டத்தைக் கூட்டி, ஏழு மனிதர் களைத் தேர்ந்தெடுக்கும்படி அவர்கள் செய்த ஏற்பாடானது, பந்தி விசாரணை என்ற பணி அவர்களின் பார்வைக்கு முக்கிய மானதாயிருந்ததை நமக்குக் கூறுகின்றது.*

*தேவையானவர்களுக்கு உணவை எடுத்துச் செல்வதும், விதவைகளைப்பற்றி அக்கறையாயிருப்பதும் புதிய ஏற்பாடு முழுவதிலும் முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டுள்ளது. நியாயத்தீர்ப்பின் நாளிலே, இயேசு ஒரு சிலரிடம், "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகமுண் டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்" என்று கூறுவார் (மத். 25:34, 35).*

*யாக்கோபுவும் கூட, ‘‘பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி” என்பது “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிப் பதிலேயே” தொடங்குகிறது என்று வலியுறுத்தினார் (யாக். 1:27).*

*கிறிஸ்துவினிமித்தமான பணிகளில் ‘‘பெரிய’’ பணிகள் மற்றம் “சிறிய” பணிகள் என்று இல்லை; “முக்கியமான” பணிகள் மற்றும் “முக்கியமற்ற” பணிகள் என்று இல்லை. இயேசு, “... ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்’’ என்று கூறினார் (மத். 10:42). நீங்கள் தேவனுக்கும் மனிதருக்கும் பணிவிடை செய்தால், நீங்கள் செய்வது அர்த்தமுள்ளதேயாகும்!*

*ஜெபம் செய்வதும் வசனத்தைப் போதிக்கும் ஊழியமும் முக்கியமானவை என்பது உண்மையே; ஆத்துமாக்கள் இரட்சிக் கப்படுவதற்கு இவ்வூழியங்கள் அவசியமானவைகள். ஆயினும், “பந்தி விசாரணை’’ மற்றும் இது போன்ற பொறுப்புக்களும் அதே அளவு முக்கியமானவை என்பதை நாம் புரிந்து கொள்வது தேவையாகும். கடந்த ஞாயிறன்று நான் அர்கன்ஸாஸில் உள்ள ஜட்சோனியாவின் பிராந்திய சபையில் பிரசங்கம் செய்தேன். ஒரு மனிதர் பாடல்களில் வழி நடத்தினார். மற்றவர்கள் ஜெபத்தில் வழி நடத்தி, கர்த்தருடைய பந்தியை அளித்தனர். ஆராதனையை முன்னின்று நடத்தும் நாம் மட்டுமே அந்த ஊழியத்தை சாத்தியமானதாகச் செய்கின்றோமா? இல்லை. நாங்கள் கூடிவரும் கட்டிடத்தை எழுப்பும் பணியில் கடந்த காலத்தில் ஆண்களும், பெண்களும் பொறுப்பேற்றிருந்தனர். சிலர் நாங்கள் அமரும் இருக்கைகளையும், நாங்கள் பயன் படுத்தும் பாடல் புத்தகங்களையும் கொடுத்தனர். நான் மேலே குறிப்பிட்ட அந்த ஆராதனை ஊழியத்திற்காக, ஒரு கிறிஸ்தவர் கட்டிடத்தைச் சுத்தம் செய்தார்; இன்னொருவர் கர்த்தருடைய பந்தியை ஆயத்தப் படுத்தினார்; இன்னும் வேறொருவர் கட்டிடம் குளிர்ச்சியாய் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொண்டார். மற்றும், அநேகரின் காணிக்கைப் பணமானது, எங்கள் வேதாகமத்தையும், பாடல் நூல்களையும் பார்க்க (படிக்க) உதவிய மின்சாரத்திற்கான கட்டணம் உள்ளிட்ட, ஆராதனை ஊழியத்தின் செலவுகள் யாவற்றையும் மேற் கொள்ளப் பயன்பட்டது. வெளிப்படையாகச் செய்யப்படும்*

இந்த ஆராதனை போன்ற செயல்பாடுகளுக்கு ''திரை மறைவில்'' செய்யப்பட்ட இவ்வகையான செயல்கள் யாவும் அவசியமாய் உள்ளன.

மக்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டால், அப்பணியுடன் அவர்கள் ஒன்றித்து, நல்ல முறையில் அதைச் செய்து முடிப் பார்கள். நல்ல முன்னோடிகள், ஒவ்வொருவரையும் அவரது பணியின் முக்கியத்துவம் எப்படிப்பட்டது என்று அறியச் செய்வதில் உறுதியாய் இருக்கின்றனர்.

## நல்ல முன்னோடிகள், சபையாரின் நம்பிக்கையையும் ஆதரவையும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றனர் (6:5)

அப்போஸ்தலர்களால் கூறப்பட்ட அறைகூவலுக்கு, சபையாரின் பதில்செயலானது "புதிய ஏற்பாட்டின் மாபெரும் அற்புதங்களில் ஒன்றாகும்": "இந்த யோசனை சபையாரெல்லா ருக்கும் பிரியமாயிருந்தது'' (வ. 5அ)! புதிய நூற்றாண்டு வேதாகமத்தில் "முழுக் குழுவினரும் இந்தக் கருத்தை விரும் பினர்" என்றுள்ளது! நான் நாற்பதாண்டுகளாக பிரசங்கித்துக் கொண்டிருக்கிறேன், ஆனால் சபையார் ஒவ்வொருவரும் விரும்பி ஏற்றுக்கொண்ட கூற்றாக ஏதொன்றையும் நான் எப்பொழுதும் கேள்விப்பட்டதில்லை! அப்போஸ்தலர்களின் ஆலோசனையானது, இருபது முதல் முப்பதாயிரம் உறுப்பினர் களுக்குப் பிரியமாயிருந்தது. அது வியப்புக்குரியதேயாகும்!

அப்போஸ்தலர்களுடைய கூற்று, முழு சபையாருக்கும் பிரியமில்லாததாயிருந்தால் என்ன நடந்திருக்கும்? அப்படி ஒரு சூழ்நிலை எழும்பாததால், அதைப்பற்றி நாம் உறுதியான பதில் எதுவும் தர இயலாது. ஆனால் ஒரு மோசமான விஷயம் இன்னும் மிக மோசமானதாயிருக்கும் என்று மட்டும் நாம் கூற முடியும். நம்மில் பலர் (நேரடி அனுபவமில்லாவிட்டாலும்) உறுப்பினர்களிடம் தன் கனத்தை இழந்துபோன சபை முன்னோடிகளைக் கண்டிருக்கிறோம். அவ்வாறு நடக்கும் போது, துன்பமான விஷயம் தொலைவில் இருப்பதில்லை.

''சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது'' என்ற

வார்த்தைகளானது, அப்போஸ்தலர்கள் இந்த விஷயத்தைக் கையாண்ட முறைக்குப் பாராட்டுரையாக அமைந்துள்ளது. வெடிக்கக் கூடிய வல்லமையுள்ள ஒரு சூழ்நிலையைப் பன்னிருவரும் உணர்வுப்பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் கையாண்டிருந்தனர். அவர்கள் சபையார்மேல் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர், இப்பொழுது உறுப்பினர்கள் தங்கள் ஆதரவினால் அதற்குப் பதிற் செய்தனர். ஒவ்வொரு சபையின் செயல்பாடும் இப்படியே இருக்க வேண்டும் - முன்னோடிகளும், உறுப்பினர் களும் ஒருவரையொருவர் நேசித்து, கனப்படுத்துகின்றபோது இவ்வாறு நடக்கும்.

## நல்ல முன்னோடிகள், பணியாளர்களுக்குத் தங்கள் ஆதரவை அளித்து அவர்களை நம்புகின்றனர் (6:5, 6)

அப்போஸ்தலர்களின் ஆலோசனை சபையாரால் அங்கிகரிக் கப்பட்டதால், அக்கருத்தானது விரைவாகச் செயல் படுத்தப் பட்டது. "அப்பொழுது விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்பையும், பிரொ கோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மெனாவை யும், யூதமார்க்கத்தமைந்தவனான[9] அந்தியோகியா பட்டணத் தானாகிய நிக்கொலாவையும் தெரிந்து கொண்டு" (வ. 5ஆ). இந்த ஏழு மனிதர்களைத் தேர்ந்தெடுக்க சபையார் எவ்விதம் முடிவு செய்தனர்? அது ஒரு செல்வாக்கின் போட்டியாக இருக்க வில்லை; ஏனென்றால் அப்போஸ்தலர்கள் கண்டிப்பான தகுதிகளை முன் வைத்திருந்தனர், சபையார் அத்தகுதிகளின் படியே நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிருந்தது. இதன்றி, தேர்ந்தெடுத்தல் நடைபெற்ற முறைபற்றி லூக்கா விபரங்கள் எதையும் கொடுக்கவில்லை. என்ன செய்ய வேண்டும் என்று மனிதர்களிடத்தில் தேவன் கூறும்போது, சில வேளைகளில் அவர் தமது சித்தத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதை அவர்களின் நல் முடிவுக்கு விட்டுவிடுகிறார். இச்சூழ்நிலையிலும் அவ்வாறே நடந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில், அட்டவணையிடப்

பட்ட முதலாவது நபர், "விசுவாசமும்[10] பரிசுத்த ஆவியும் நிறைந்தவரான ஸ்தேவான்" ஆவார். இவ்வதிகாரத்திலும், 7 ம் அதிகாரத்திலும் முக்கியமான பாத்திரமாக இருப்பதால் ஸ்தேவானின் பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்தபடியாக பிலிப்புவின் பெயர் வருகிறது, ஏனென்றால் அதிகாரம் 8ல் அவர் பிரதான பாத்திரமாயிருக்கப் போகின்றார். பிரகோர், நிக்கானோர், தீமோன், பர்மெனா மற்றும் யூத மார்க்கத்தமைந்தவராகிய அந்தியோகியா[11] பட்டணத் தானாகிய நிக்கோலா[12] ஆகியோரைப் பற்றிப் புதிய ஏற்பாடு எதையும் கூறவில்லை. இதில் குறிப்பிடத் தக்க மாபெரும் விஷயம் என்னவென்றால் இவை யாவும் கிரேக்கப் பெயர்கள் என்ற உண்மையே ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருமோ (அல்லது அநேகரோ) கிரேக்கரானவர்(யூதர்)களாயிருக்க[13] பலமான சாத்தியக் கூறு உள்ளது. அப்படியிருந்தால், சபையாரின் பகுதியில் இருந்த செயலான்மைத் திறத்தை நாம் வியப்புடன் காண்கின்றோம். "சபையாரில் கிரேக்க மொழி பேசும் குழுவினரிடமிருந்தே முறுமுறுப்பு எழுந்தது; எனவே இவ்வேலையைப் பார்ப்பதற்குத் தேர்ந்து கொள்ளப்படுபவர்கள் அக்குழுவிலிருந்தே ஏற்படுத்தப்பட்டால் அவர்கள் தங்கள் உற்சாகத்தை நியாயமாய்க் காட்டிப் பணிபுரிவார்கள்" என்று ஓரயிஸ்ஃபாஸ்ட்டர் விளக்கமளிக்கிறார். எபிரெய யூதர்கள்[14] கிரேக்கரானவர் (யூதர்) களிடம், "நீங்கள் எங்கள் விதவைகளைப் பராமரிப்பீர்கள் என்று நம்புகிறோம்"[15] என்று கூறியதே இதன் சாரமாகும்.

சபையார் கூடி ஏழு பேரைத் தேர்ந்தெடுத்த பிறகு, "அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் [அப்போஸ்தலர்கள்] ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்" (வ. 6). தனிநபர்கள் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர்கள் "பணியில் அமர்த்தப்பட வேண்டியது" அவசியமாயிருந்தது, இது ஒரு மதச் சடங்காகச் செய்யப்பட்டு அதன்மூலம் அப்பணியின் முக்கியத்துவத்தை அவர்கள் இருதயங்களில் உணர்த்தும்படியாகவும் - அவர்கள் யாருக்கு ஊழியம் செய்கிறார்களோ அவர்கள், இவர்களுக்கு உதவவும், ஆதரவளிக்கவும் வேண்டும் என்ற உணர்வைத் தங்கள் இருதயங்களில் பெற்றுக்கொள்ளும்படியாகவும் நடந்தேறியது. இதை அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணி

*(14:23 ஐக் காணவும்) சபையாருக்கு முன்பாக அவர்களின் தலைகளின் மேல் கைகளை வைத்து நிறைவேற்றினார்கள்.*

*கைகளை வைக்கும் சடங்கில் அடங்கியிருந்தது என்ன என்பது நமக்குச் சரியாகத் தெரியவில்லை. வேதாகமம் எழுதப் பட்ட காலங்களில் அநேக வகையான காரணங்களுக்காக மக்கள் மேல் கைகள் வைக்கப்பட்டன: ஆசீர்வாதம் கொடுப்ப தற்காக (ஆதி. 48:13-20), குணப்படுத்துவதற்காக (அப். 28:8), அலுவலில் நியமித்து அதிகாரத்தை அளிப்பதற்காக (எண். 27:18; அப். 13:3).[16] அப்போஸ்தலர்கள், அற்புதவரங்களைக் கொடுப்ப தற்காகக் கிறிஸ்தவர்களின் மேல் கைகளை வைத்தனர் (அப். 8:18; 19:6). இந்த ஏழு பேரின் விஷயத்தில், தலைகளின் மேல் கைகளை வைத்தது இரண்டு நோக்கங்களுக்குப் பயன்பட்டிருக் கலாம். அவர்களின் புதிய பணிக்கென்று முறையாக அவர் களைப் பிரித்து வைப்பதற்கும் மற்றும் அவர்களின் புதிய பொறுப்புகளை[17] நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு விசேஷ வரங்களைக் கொடுப்பதற்கும்[18] இவ்வாறு செய்யப்பட்டிருக் கலாம். அப்போஸ்தலர்களின் இந்தச் செயல்பாடானது, "இம்மனிதர்களுக்குப் பின்னால் நாங்கள் இருந்து இவர்களுக்கு ஒவ்வொரு வழியிலும் ஆதரவளிப்போம்" என்று அந்த ஏழு பேருக்கும், சபையார் யாவருக்கும் கூறுவதாய் இருந்தது. நல்ல முன்னோடிகள் தங்கள் ஆதரவை வெளிப்படுத்துகின்றனர்.*

*மக்களின் மேல் கைகளை வைத்து அற்புத வரங்களைக் கொடுப்பதற்கு நாம் யாரும் அப்போஸ்தலர்களல்ல, புதிய முன்னோடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தெரிவிக்க நாம் தேர்ந்து கொள்ளும் முறை எதுவாக இருந்தாலும் அது அப்போஸ்தலர்கள் தேர்ந்து கொண்ட முறையிலிருந்து மாறு பட்டதாகவே இருக்கும். நாம் அவர்களது முன்மாதிரியைப் பின்கண்ட வழிகளில் இறுகப்பற்றிப் பின்தொடரலாம்: (1) நாம் பயபக்தியோடு ஜெபத்தில் ஈடுபடலாம், (2) பணியின் முக்கியத் துவத்தை நாம் வலியுறுத்தலாம், மற்றும் (3) நியமிக்கப் பட்டவர்களுக்கு நமது ஆதரவை வெளிப்படுத்தலாம்.[19]*

*நல்ல முன்னோடிகள், புதிய பணியாளர்களுக்கு ஆதரவை வெளிப்படுத்துவதோடு நின்று விடுவதில்லை; அவர்கள் தங்கள் பணியை முடிப்பார்கள் என்று அவர்கள் மேல் நம்பிக்கை வைக்கின்றனர். வசனம் 6 மற்றும் 7ல் உள்ள "வரிகளுக்கிடை யில் படிக்கின்றபோது" நான் பின்வருவனவற்றை ஆலோசனை*

யாகத் தருகின்றேன்: (1) ஏழு பேர் மீது கைகளை வைத்து ஜெபித்த பிறகு அப்போஸ்தலர்கள், அவர்களை எவ்வித இடையூறுமின்றிப் பணிபுரியும்படி விட்டனர்; (2) இந்த ஏழு பேரும் தங்கள் பணி குறித்த முடிவெடுக்கையில் ஒவ்வொரு சமயமும் அப்போஸ்தலர்களிடம் பரிசீலனை செய்யத் தேவையில்லாதிருந்தது; (3) ஏழு பேரும் தங்களுக்கு நியமிக்கப் பட்ட பணியைச் செய்தனர். மேற்கண்டவைகளில் முதல் இரண்டு கூற்றுகளும் உண்மையானவை என்று நான் நம்பு கின்றேன்; ஏனெனில் வேறு எந்த விதமான ஏற்பாடும், இந்த ஏழு பேரைத் தேர்ந்தெடுத்ததின் நோக்கத்தை ஒன்றுமற்ற தாக்கியிருக்கக் கூடும்; அப்போஸ்தலர்கள் வசனத்தைப் போதிக் கும் ஊழியத்திலிருந்து விலகிச் செல்ல வழி வகுத்திருந்திருக்கும். வசனம் 7ல் உள்ள நேர்மறையான விளைவுகளை காணும் போது, மேற்சொன்னவைகளில் மூன்றாவது கூற்றும் உண்மை யானது என்று நான் நம்புகிறேன்.

இந்நாட்களில் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயமானது, மூப்பர்களை மேய்ப்புப் பணியில் கவனம் செலுத்தும்படிக்கு விடுதலையாக்குவதில்லை என்பதால் இந்த விபரங்களை நான் வலியுறுத்துகின்றேன்; உதவிக்காரர்கள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் மூப்பர்களிடம் பரிசீலனை செய்கின்றனர்.[20] நான் அனைத்து மூப்பர்களுக்கும் கூறுவது இதுதான்: உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப் படுகையில், அவர்கள் தங்கள் பணிகளைச் செய்ய அனு மதியுங்கள்! அவர்கள் பணிகளைச் செய்வார்கள் என்று அவர்கள் மேல் நம்பிக்கை வையுங்கள், உங்களால் அவர்கள் பணிகளைச் செய்ய முடியும் என்று நம்ப முடியாவிட்டால், அவர்களை நியமிக்காதீர்கள். அவர்கள் உங்கள் நம்பிக்கைக்குத் துரோகம் செய்து அவர்கள் பணிகளைச் செய்யத் தவறினால், நீங்கள் நம்பிக்கை வைக்கின்ற மற்றவர்களை நியமியுங்கள். மந்தைக்கு மேய்ப்பர்களாக இருப்பதற்கு உங்கள் நேரத்தை ஒப்புக் கொடுங்கள்!

## முடிவுரை

சாத்தான் மீண்டும் ஒருமுறை சபையை அழிக்க முயற்சி செய்தான், மீண்டும் ஒருமுறை அவன் தோல்வியுற்றான். நமது

*முந்திய பாடம் கண்ணால் காணக் கூடிய வளர்ச்சியைப் பற்றிய கூற்று ஒன்றுடன் தொடங்கிற்று; இந்தப் பாடமும் அதே விதமான கூற்று ஒன்றுடன் முடிகின்றது: "தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று" (வ. 7அ). இதற்கு முன்பு உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபது முதல் முப்பதாயிரமாயிருந்திருக்கும் என்று நாம் மதிப்பிட்டோம்; இப்பொழுது, "... தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று." இப்பொழுது மொத்தத் தொகையை நாம் மதிப்பிட முடியாததாய் உள்ளது! வளர்ச்சி பற்றிய இந்தக் கூற்றானது ஆச்சரியமூட்டும் குறிப்பொன்றையும் கூட்டித் தருகின்றது: "ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்" (வ. 7ஆ). அப்போஸ்தலர்களை உபத்திரவப்படுத்தின "பிரதான ஆசாரியர்கள்" (4:23; 5:24) அநேகமாக இவர்களில் இருந்திருக்க மாட்டார்கள், ஆனால் ஒவ்வொரு ஆண்டிலும்[21] இரண்டு வாரங்கள் தேவாலய ஊழியம் செய்ய வாய்ப்புப் பெற்ற "சாதாரண" ஆசாரியர்கள் இவர்களில் இருந்திருக்கலாம். இது குறிப்பிடத் தக்க ஒரு கூற்றாகும். ஆலோசனைச் சங்கத்தில் இருந்தவர்கள் போலவே, இந்த ஆசாரியர்களும் தவறான உபதேசத்தின் மேல் ஆர்வமுள்ளவர்களாயிருந்தனர்; ஆலோசனைச் சங்கத்தில் இருந்தவர்கள் போலின்றி, இவர்களில் அநேகர் கிறிஸ்தவத்தை ஆராய்ந்து பார்க்குமளவு நேர்மையான இருதயம் உள்ளவர்களாயிருந்தனர். இவ்விதமாக அவர்கள் "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்",[22] மற்றும் இவர்கள் கிறிஸ்தவர்களானார்கள்! சுவிசேஷத்தின் வல்லமைக்கு இது எவ்வளவு பெருமை!*

*எருசலேமின் சபை வளர்ச்சி குறித்து ஒரு சூழ்நிலைக் கூற்றாக வசனம் 7 உள்ளது. மக்கள், விரிசல்களின் மூலம் விழுகின்றபோது, நல்ல முன்னோடிகள் நேர்மறையான வழியில் பதில்செயல் செய்தால் என்ன நடக்க முடியும் என்பதை இது காட்டுகின்றது.*

## *காட்சி-உதவிக் குறிப்புகள்*

*ஒவ்வொருவரும் தங்கள் பங்கை நிறைவேற்றும்பொழுது சபை வளர்ந்து செழிக்கும் என்பதே இந்தப் பாடத்திலும்,*

இதற்கு முந்திய பாடத்திலும் வலியுறுத்தப்படுகின்றது. இந்த அறிமுகத்தை நீங்கள் வகுப்பறையில் பயன்படுத்தினால், இதை விளக்கும் வழி கீழே தரப்படுகின்றது: வகுப்பிற்கு முன்பாக, அநேக குச்சிகளை ஒரு கட்டாகக் கட்டுங்கள். வகுப்பு நடக்கும் போது, வகுப்பில் உள்ளவர்களை ஒவ்வொருவராக அழைத்து அந்தக் கட்டை இரண்டாக முறிக்கும்படிக் கூறுங்கள் (ஒவ் வொருவரும் தோல்வியடைகையில், அவர்களை உங்களுடன் வகுப்பிற்கு முன்னதாக நிற்க வைத்துக் கொள்ளுங்கள்). இறுதியாக, கட்டை அவிழ்த்து வகுப்பின் முன் நிற்பவர்களிடம் ஆளுக்கு ஒரு குச்சியாகக் கொடுங்கள். இப்பொழுது அவர் களால் குச்சிகளை சுலபமாக முறிக்க முடியும். ஒரு நபரே எல்லாப் பணிகளையும் செய்ய முயன்றால், அது செய்து முடிக்கப்பட முடியாது. பணியானது அநேக மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டால் அதைச் செய்ய முடியும்.

## பிரசங்கக் குறிப்புகள்

சி. புரூஸ் அவர்கள் அப். 6:1-5 வசனப்பகுதியை வைத்து "செயல்பாட்டில் தலைமைத்துவம்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் செய்துள்ளார் (Preacher's Periodical [December 1986]). இதில் புறக்குறிப்பாக மூன்று "C" க்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன: (1) Complaining (வ. 1) முறையிடுதல், (2) Counter-action (வ. 2-4) எதிர்ச்செயல், மற்றும் (3) Contentment (வ. 5) திருப்தி.

குறிப்புகள்

[1]மாறாக, அவர்கள் "ஏழு பேர்" என்று அழைக்கப்பட்டனர் (21:8). [2]எடுத்துக் காட்டாக, உதவிக்காரராகத் தகுதி பெறுவதற்கு, குடும்பம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும், ஆனால் இந்த ஏழு பேரின் தகுதிகளில் குடும்பத்தைப்பற்றிய ஆழ்ந்த யோசனை எதுவும் தரப்படவில்லை. [3]*Diakonos* என்ற கிரேக்க வார்த்தையானது, எந்த ஒரு ஊழியனையும் குறிக்கும் பொதுவான விதத்திலோ அல்லது சபையாரால் "உதவிக்காரர்" என்று அங்கிகரிக்கப்படுபவரை விசேஷித்த விதத்தில் குறிப்பிடவோ பயன்படுத்தப்பட முடியும். சொற்பொருள் அகராதியில் "Deacon" - உதவிக்காரர்

என்ற வார்த்தையின் கீழ் காணவும். [4]உதவிக்காரர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கூறும் பொறுப்புகளின் வகைகள் பற்றிய உள்ளறிவுடன் கூட, உதவிக்காரர்களின் தகுதியாக 6:3ல் உள்ளவற்றையும் குறிப்பிடுவது பொதுவான நடைமுறையாகும். இரண்டு அட்டவணைகளும் ஒன்றையொன்று நிறைவாக்குபவை என்று எண்ணப் பட்டன. [5]ஒரு நபர் எவ்வளவு நன்றாகப் பேச, பாடல்களை நடத்த முடியும் என்பது ஒரு வேறுபாட்டையும் உண்டாக்குவதில்லை; அவரது திறமைகள் யாவும் தேவபக்தியான வாழ்க்கையினால் பெலப்பட்டிருக்காவிட்டால், பொதுவாக அவரது முயற்சிகள் யாவும் சபைக்கு உதவியாயிருப்பதற்குப் பதில், பாதிப்பையே ஏற்படுத்தும். [6]இவ்விடத்தில் “high profile” என்ற ஆங்கில வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது. இது மற்றவர்களால் பார்க்கப்படக் கூடிய பணிப்பொறுப்புகள் என்று பொருள்படும்: “low profile” என்பது நாம் என்ன செய்கின்றோம் என்று மற்றவர்கள் பார்க்காதிருக்கும் பணிப் பொறுப்புகள் என்று பொருள்படும். [7]அப்போஸ்தலர் களுக்குப் பயன்படுத்தப்படும்போது இச்சொற்றொடர் அற்புத வரங்கள் என்ற கருத்தை அளிக்கிறது. இந்நிகழ்ச்சி வரையிலும், அப்போஸ்தலர்களைத் தவிர வேறு யாரும் அற்புதங்களைச் செய்ததாகப் பதியப்படவில்லை. அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்த பிறகே ஸ்தேவானும், பிலிப்பும் அற்புதங்கள் செய்ய முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (8:18ஐக் கவனிக்கவும்). [8]முதல் பார்வையில் ஊழியக்காரர்களுக்கு அப். 6ல் மூன்று தகுதிகளே காணப்படுகின்றன. ஆயினும், “ஆவியினால் நிறைந்தவர்” என்று ஒருவரைப்பற்றிக் கூறுவதற்கு அவரது வாழ்வில் காணப்படும் ‘‘ஆவியின் கனிகள்’’ மட்டுமே ஒரே ஒரு வழியாய் இருப்பதால், இது மேலும் ஒன்பது ‘‘தகுதிகளை’’ கூட்டுகின்றது. [9]யூத மார்க்கத்தமைந்தவர்கள் சபையில் இருந்ததுபற்றி இவ்விடத்தில்தான் முதன்முறை யாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பே அநேகமாகச் சிலர் ஞானஸ்நானம் பெற்றிருக்க வேண்டும் (அப். 2:10, 38, 41), ஆனால் யூதமார்க்கத்தமைந்தவர் ஒரு கிறிஸ்தவரானது பற்றிக் குறிப்பிடப்படுவது இதுவே முதல் தடவையாகும். நடபடிகள்: 1 இதழின் சொற்பொருளகராதியில் “Proselyte” - யூத மார்க்கத் தமைந்தவர் என்ற வார்த்தையின் கீழ் காணவும். [10]“விசுவாசத்தினால் நிறைந்து” என்பது குறிப்பாகக் கூறப்படவில்லை, ஆனால் தகுதிகளில் இது மறைமுகமான பொருளில் வருகின்றது. “விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்து காணப்படுவது” என்பது அப்போஸ்தலர்களால் முன் வைக்கப்பட்ட தகுதிகளை அவர் பெற்றிருந்தார் என்று நம்மை அறியச் செய்கிறது (மற்ற ஆறு பேரும் கூட இத்தகுதி பெற்றிருந்தனர் என்பது இங்கு மறைமுகமாகக் குறிப்பிடுகிறது).

[11]நிக்கொலாய் ‘‘அந்தியோகியா பட்டணத்தான்’’ என்று லூக்கா குறிப் பிட்டுள்ளதாலும், மற்ற ஆறு பேருக்கு இவ்வித விபரம் எதுவும் அவர் குறிப்பிடாத தாலும், இச்சொற்றொடருக்கு நிச்சயமாகச் சில முக்கியத்துவங்கள் இருக்க வேண்டும். ஒருவேளை லூக்கா, சீரியாவின் அந்தியோகியா பட்டணத்தை அறிமுகப்படுத்தியிருக்கலாம், இப்பட்டணம் பவுலின் ஊழியச் செயல்பாட்டிற்கு அடிப்படையானதாகும். (மேலும், ஏவப்பட்டிராத பாரம்பரியமானது, லூக்காவின் சொந்த ஊர் அந்தியோகியா பட்டணமாகும் என்று கூறுகிறது.) [12]நிகொலாய் மதஸ்தர் (வெளி. 2:6, 15ல் கண்டனம் செய்யப்படுவர்கள்) என்ற மதப்பிரிவினர் இந்த நிகொலாயிடம் இருந்தே தாங்கள் தொடங்கியதாகக் கூறுகின்றனர். அவர்களின் கட்டுக்கதைக்கு ஒரு மதிப்பளிக்கவே அந்த மார்க்கக் குழுவினர் இவரது பெயரைப் பயன்படுத்தினர் என்பதே உறுதியானதாகும். [13]இந்த ஏழு பெயர்களும் கிரேக்கப் பெயர்களாயிருப்பதினாலேயே இவர்கள் யாவரும் கிரேக்கரானவர் (யூதர்)கள் என்பதற்கு இது நிரூபணமாகி விடாது; அப்போஸ்தலர்களில் சிலருக்குக்கூட (அந்திரேயா, பிலிப்பு) கிரேக்கப் பெயர்கள் இருந்தன. ஆயினும், பிலிப்பு என்ற ஒரு பெயரைத் தவிர இங்கு வரும் மற்ற பெயர்கள் யாவும்

பலஸ்தீனிய யூதர்களால் தகுதிப் படுத்தப்பட்ட பொதுவான கிரேக்கப் பெயர்கள் அல்ல. எருசலேம் சபையிலிருந்த கிரேக்கரானவர்(யூதர்)களின் குழுவுக்கு இவர்கள் முன்னோடிகளாயிருந்திருக்க வேண்டும். [14]எபிரெய யூதர்கள் பெரும்பான்மை யானவர்களாய் இருந்திருக்க வேண்டும். [15]கிரேக்கரானவர்(யூதர்)களின் விதவைகளை மட்டும் கவனித்துக் கொள்ளும்படி இந்த ஏழு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கச் சாத்தியக்கூறுண்டு. வசன சூழ்நிலையானது, இவர்கள் பந்தி விசாரணை செய்யும் பொறுப்பு முழுவதற்கும் (விதவைகளுக்கு உணவளிப்பதுடன் கூட இன்னும் பிற பணிகள்) நியமிக்கப்பட்டதற்கே ஆதரவாக உள்ளது. [16]"கைகளை வைத்தல்" என்பது கைது செய்வதையும் குறிக்கும் (4:3). மற்றும், பழைய ஏற்பாட்டின் காலத்தில் மிருகங்களை அடையாளப் படுத்துவதற்காக அவைகளின் மேல் கைகளை வைப்பதும் உண்டு (லேவி. 1:4). [17]வேதவசனங்களில், ஒருவருக்குப்பின் வருபவருக்கு, முன்னிருந்தவரின் அதிகாரங்களைப் பெறுவது என்பது பொதுவான நடைமுறையாயிருந்தது. இது தேவன் முன்னிருந்தவரோடு இருந்தது போலவே பின்வருபவரோடும் இருந்தார் என்பதைக் காட்டுவதற்காகத் தரப்பட்டது. ஒருவேளை அப்போஸ்தலர்களோடு தேவன் இருந்ததைப் போலவே இந்த ஏழு பேர்களுடனும் இருந்தார் என்று காண்பிப்பதற்காக அற்புத வரங்கள் இவர்களுக்குத் தரப்பட்டிருக்கலாம். [18]ஒரு குறுகிய காலத்திற்குப் பின்னர், ஸ்தேவானும், பிலிப்பும் அற்புத வல்லமையுள்ளவர்களாய்க் காணப்பட்டனர் (6:8; 8:6-8). மற்ற ஐந்து பேரைப்பற்றி நமக்கு எதுவும் கூறப்படவில்லை. சபையின் விசேஷித்த ஊழியர்களாக நியமிக்கப்படுகையில் ஸ்தேவானும், பிலிப்பும் அற்புத வரங்களைப் பெற்றிருக்காவிட்டால், அதற்குச் சற்றுப் பிந்தி அப்போஸ்தலர்கள் அந்த நோக்கத்திற்காக அவர்கள் மேல் கைகளை வைத்திருக்க வேண்டும். [19]அமெரிக்க நாட்டில், கைகளைக் குலுக்குதல் அல்லது முதுகில் தட்டிக் கொடுத்தல் போன்றவை மூலம் ஆதரவு அளிக்கும் செயல் சில சமயங்களில் வெளிக்காட்டப் படுகின்றது. சபையார் தங்கள் முன்னோடிகளின் மேல் "கைகளை வைத்து" பின்பு கை குலுக்கும்படியோ, அல்லது ஆராதனை முடிவில் அவர்களின் முதுகில் தட்டிக் கொடுக்கும்படியோ நான் சபையாரை உற்சாகப்படுத்துவதுண்டு. [20]சில வேளைகளில் இது மூப்பர்களின் தவறாக இருக்கும், இது அவர்களின் தலைமைத் துவப்பாணியின் விளைவாகும். சில வேளைகளில் இது அவர்கள் உதவிக்காரர்களின் தவறாக இருக்கும்; இது தங்கள் செயல்பாட்டிற்கான முழுப் பொறுப்பை ஏற்கத் தயங்குவதைக் காட்டுகின்றது.

[21]அந்த நாட்களில், ஆசாரியர்களும், லேவியர்களும் பதினெட்டாயிரம் பேர் இருந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் யோவான் ஸ்நானனின் தகப்பனாகிய சகரியாவைப் போல (லூக். 1:5, 6) நேர்மையும், தேவனுக்குப் பயந்து நீதியுள்ளவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். மனம் மாறிய இந்த ஆசாரியர்கள் தொடர்ந்து தேவாலயத்தில் ஊழியம் செய்தார்களா இல்லையா என்பது குறித்து அதிகமான யூகங்கள் எழும்பியுள்ளன. அவர்கள் அவ்வாறு செய்திருப்பார்கள் என்று நம்புவதற்கு ஒரு காரணமும் நான் அறியவில்லை. அப்படி அவர்கள் செய்திருந்தால், எளிய உபதேசமான "உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்" (7:48) என்பதற்கு முரண்பாடாகவே அவர்கள் செய்திருக்க வேண்டும். மற்றும், அவர்கள் அப்படிச் செய்திருந்தால், எருசலேமிலிருந்து கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டபோது (8:1-4), அவர்கள் தங்களின் பணி அல்லது கிறிஸ்துவுக்காக நிலைநிற்றல் இவ்விரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டியிருக்கும். [22]இத்தொகுப்புரையானது, இயேசுவை விசுவாசிப்பதால் மட்டும் மக்கள் கிறிஸ்தவர்களாகிவிடுவதில்லை என்பதைக் காட்டுகின்றது. அவர்களின் பதில்செயலில் விசுவாசம் ஒரு முக்கிய பாகமாகும். இச்சொற்

றொடருக்கு, ''கீழ்ப்படிதலில் விசுவாசம் அடங்கியுள்ளது'' என்று பொருள் கொள்வதன் மூலம் சிலர் இதன் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கின்றனர். ஆயினும், மூல வசனத்தில், ''ஆசாரியர்கள் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தனர்'' என்றுள்ளது ("the priests obeyed the faith"). Faith என்ற வார்த்தைக்கு முன் உள்ள "the" என்ற குறிப்புச் சுட்டுச் சொல்லானது, இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை மையமாகக் கொண்ட போதனையையே பொதுவாகக் குறிக்கின்றது - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இது புதிய ஏற்பாட்டைக் குறிக்கின்றது (யூதா 3). இயேசு கட்டளையிட்ட ஒவ்வொன்றையும் - ஞானஸ்நானம் பெறுவது உட்பட (2:38) - ஆசாரியர்கள் செய்ய மனதாயிருந்தனர்.